**TNVR020001832026**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.
முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B (Hons)., L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.
2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17-ஆம் நாள் செவ்வாய்கிழமை
<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.77/2026</u>

| | | | |
|---|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | | அரசுக்காக:–<br>சார்பு ஆய்வாளர்,<br>மல்லி காவல் நிலையம்,<br>குற்ற எண்.135/2025 | |
| குற்றம்சாட்டப்பட்டவரின் பெயர் | | கார்த்திக், (30/26),<br>த/பெ.சங்கர்,<br>3/405 C சக்கம்மாள் காலனி,<br>ஆலமரத்துப்பட்டி,<br>திருத்தங்கல்,<br>சிவகாசி. | |
| சம்பவம் நடந்த நாள் | | 22.10.2025 | |
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | | 22.10.2025 | |
| எதிரி | | கைதான நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | 23.10.2025 | 23.10.2025ம் தேதி காவல் நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| எதிரி மீது குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | – | 06.03.2026 | |
| குற்றம் | | | |
| 1. சாட்டப்பட்டது | – | எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 125(a)(2 Counts), 125(b) BNS–ன் கீழ் | |

| | | |
|---|---|---|
| 2. வனையப்பட்டது | – | எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 125(a)(2 Counts), 125(b) BNS–ன் கீழ் |
| காலதாமதத்திற்கான காரணம் | – | தாமதம் இல்லை |
| அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை பற்றிய விவரங்கள் | – | அ.சா.1 13.03.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.2 13.03.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.3 13.03.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை<br><br>அ.சா.4 13.03.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை<br><br>அ.சா.5 16.03.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை |
| எதிரியிடம் BNSS பிரிவு 351(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | – | 05.02.2026 |
| அரசு தரப்பு வழக்கறிஞர் | – | திருமதி.P.பெத்துரதி, MBA., B.L., |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | – | திரு.M.விக்ரம்மதிவாணன், B.A., B.L., |
| எதிரியின் கூற்று | – | எதிரி ஆம், நான்தான் செய்தேன் என்று கூறினார். |

| | | |
|---|---|---|
| நீதிமன்றத்தின் முடிவு | – | முடிவாக, எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 125(a)(2 Counts), 125(b) BNS ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து, எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281 BNS கீழான குற்றத்திற்கு ரூ.1000/– அபராதமும், 125(a))(2 Counts) BNS–ன் கீழான குற்றத்திற்கு தலா ரூ.2,500/–வீதம் ரூ.5,000/– அபராதமும், 125(b) BNS ன் கீழான குற்றத்திற்கு ரூ.6,000/– அபராதமும் விதித்து பிரிவு 271(2) BNSS ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் மொத்த அபராதத் தொகை ரூ.12,000/–(ரூபாய் பன்னிரெண்டாயிரம் மட்டும்) ஆகும். மேற்படி அபராத தொகையை கட்டத் தவறினால் 1 மாதம் மெய்க்காவல் சிறை தண்டணை விதித்து உத்தரவிடப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் தாக்கல் இல்லை. எனவே வழக்கு சொத்து பற்றிய உத்தரவு இல்லை.<br><br>எதிரி எழுதிக் கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது 09.01.2026 ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 17.03.20266 ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 திருமதி.P.பெத்துரதி, MBA., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.M.விக்ரம்மதிவாணன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குப் பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்.........

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கின் புகார்தாரர் திருவில்லிபுத்தூர் ரைட்டன்பட்டி காலனியில் குடியிருந்து

வருவதாகவும், புகார்தாரரின் அக்கா மகனும் காயம்பட்ட நபருமான பெருமாள் என்பவர் அவரது மனைவியுடன் திருவில்லிபுத்தூரில் வசித்து வருவதாகவும், மேலும் பெருமாள் தலைதீபாவளிக்காக அவரது மனைவியுடன் சாத்தூர் சென்றுவிட்டு பின்னர் திரும்பவும் திருவில்லிபுத்தூர் வருவதற்காக கடந்த 22.10.2025ம் தேதி காலை 11.30 மணியைப் போல் அவர் ஓட்டி வந்த TN 59 BB 6266 என்ற எண் கொண்ட Hyundai காரில் பெருமாள் அவரது மனைவி மற்றும் மாமியார் ஆகியோர்களை ஏற்றிக்கொண்டு சிவகாசியில் இருந்து திருவில்லிபுத்தூர் செல்லும் மெயின்ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி பண்டிதன்பட்டி விலக்கு அடுத்துள்ள பெனிங்டன் ஸ்கூல் அருகில் சென்று கொண்டிருந்த போது அதே ரோட்டில் அவருக்கு எதிர் திசையில் TN 67 BA 9252 என்ற எண் கொண்ட ஜெகதாம்பிகா தனியார் பேருந்தினை ஓட்டி வந்த எதிரி தனியார் பேருந்தினை அதிகவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து பெருமாள் ஓட்டி வந்த காரின் மீது மோதியதில் பெருமாளுக்கு வலது கையில் சிறுதன்மை காயமும், அவரது மனைவிக்கு சிறு சிறு காயங்களும், பெருமாளின் மாமியாருக்கு தலையில் கொடுங்காயத்தையும் ஏற்படுத்திய குற்றத்திற்காக மல்லி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரியாகிய உம்மீது பிரிவுகள் 281, 125(a) (2 Counts), 125(b) BNS–ன், கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான போது, எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 230-BNSS ன் படி இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பிறகு எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 281, 125(a)(2 Counts), 125(b) BNS–ன் படி குற்றம் குறித்து வினவியபோது குற்றத்தை மறுத்து குற்றவாளி இல்லை என்று கூறினார். எனவே அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையான சாட்சிகள் விசாரணை செய்து, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–

4.1. அ.சா.1 திரு.நாகராஜ் தனது சாட்சியத்தில், தான் தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருவதாகவும், தான் கூலி வேலை செய்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், தான் புகார் மனு கொடுத்தபோது அவரும் காவல்நிலையத்தில் இருந்தார் என்றும், போனவருடம் தலைதீபாவளிக்கு தனது மருமகன் பெருமாள் மற்றும் அவரது மனைவி ேஹமாவும் சாத்தூருக்கு தலைதீபாவளிக்காக சென்றிருந்தார்கள் என்றும், பின்னர் சாத்தூரிலிருந்து மேற்படி பெருமாள் ேஹமா மற்றும் ேஹமாவின் அம்மா தேவி ஆகியோர் காரில் சாத்தூரிலிருந்து திருவில்லிபுத்தூர் நோக்கி வந்து கொண்டிருந்தபோது பண்டிதன்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே உள்ள பள்ளி அருகே வந்தபோது அதே ரோட்டில் திருவில்லிபுத்தூரிலிருந்து சாத்தூர் நோக்கி சென்று கொண்டிருந்த ஜெகதாம்பிகா என்ற தனியார் பேருந்து மேற்படி காரில் மோதியதில் கார் நொறுங்கிவிட்டது என்றும், அதில் காரின் கண்ணாடி உடைந்து பெருமாள் மீது பட்டதில் அவருக்கு கை காது தலை போன்ற இடங்களில் காயம் ஏற்பட்டது என்றும், மேற்படி ே ஹமா விபத்தின்போது வாகனம் மோதியதில் வாகனத்திலிருந்து கீழே விழுந்துவிட்டார் என்றும், பின்னர் அமர்ந்திருந்த தேவி என்பவருக்கு தலை மற்றும் முகத்தில் காயம் ஏற்பட்டது என்றும், பின்னர் அவர்களை சிகிச்சைக்காக திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள் என்றும், அதன் பின்னர் தகவல் தெரிந்து தான் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றபோது பெருமாள் பேசமுடியாமல் பதற்றத்தில் இருந்தார் என்றும், மேற்படி ேஹமா ஒரு பக்கம் அழுதுகொண்டிருந்தார் என்றும், மேற்படி தேவிக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு அவரை விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு மருத்துவர்கள் கூறினார்கள் என்றும், அதனால் அவரை அங்கு அழைத்து சென்றுவிட்டனர் என்றும், தனது மருமகன் பேசமுடியாமல் காயத்துடன் இருந்ததால் தானே இவ்வழக்கு சம்பந்தமாக மல்லி காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்ததாகவும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து தன்னுடையது

தான் என்றும், புகார் மனு அசாஆ.1 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4.2.அ.சா.2 திரு.பெருமாள் தனது சாட்சியத்தில், தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருவதாகவும், தான் ஓட்டுநராக வேலை செய்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், அசா.1 தனது மாமா என்றும், கடந்த 22.10.2025 அன்று தனது மனைவி ேஹமா சாத்தூரிலுள்ள அவரது அம்மா வீட்டிலிருந்ததால் அவரை அழைத்து வருவதற்காக சாத்தூருக்கு சென்று பின்னர் மேற்படி தேதியில் அவரையும் எனது மாமியார் தேவியையும் அழைத்துக்கொண்டு வந்தபோது பண்டிதன்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே தாங்கள் காரில் வந்து கொண்டிருந்த போது அதே ரோட்டில் எதிர் திசையில் ஜெகதாம்பிகா தனியார் பேருந்தானது அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்து தனது காரின் மீது மோதியதில் காரில் உடைந்த கண்ணாடி துண்டு தன் மீது பட்டதில் தனக்கு கழுத்தில் காயம் ஏற்பட்டது என்றும், வலது கால் மற்றும் கையில் ரத்தக்காயங்கள் ஏற்பட்டது என்றும், தனது மனைவி காரிலிருந்து வெளியே விழுந்து விட்டார் என்றும், தனது மாமியாருக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றும், அதனால் அவருக்கு வலிப்பு வந்துவிட்டது என்றும், சம்பவயிடத்திலிருந்த நபர்கள் ஆம்புலன்ஸிற்கு போன் செய்து தங்களை திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள் என்றும், தனக்கு புறநோயாளியாக சிகிச்சை அளித்தனர் என்றும், தனது மனைவிக்கு சிறு சிறு ரத்ததக்காயங்கள் ஏற்பட்டிருந்தது என்றும், தனது மாமியாருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்ததால் மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று உள்நோயாளியாக சேர்த்ததாகவும், திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் தாங்கள் சிகிச்சை பெற்றபோது தனது மாமா நாகராஜ் அங்கு வந்து தங்களை பார்த்துவிட்டு மல்லி காவல்நிலையத்தில் இவ்வழக்கு சம்பவம் பற்றி புகார் கொடுத்தார் என்றும், ஆஜர் எதிரிதான் மேற்படி பேருந்தை ஓட்டிவந்தவர் என்றும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4.3.அ.சா.3 திருமதி.ேஹமா தனது சாட்சியத்தில், தான் தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருவதாகவும், தான் வேலைக்கு எதுவும் செல்லவில்லை என்றும், அசா.1 ஐ தெரியும் அவர் தனது கணவரின் மாமா என்றும்,

அசா.2 தனது கணவர் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், அவர் தங்கள் கார் மீது மோதிய பேருந்தின் ஓட்டுநர் என்றும், தான் கற்பமாக இருந்ததால் சாத்தூரிலுள்ள தனது அம்மா வீட்டில் இருந்ததாகவும், தலைதீபாவளி கொண்டாடுவதற்காக தனது கணவர் சாத்தூருக்கு வந்துவிட்டு பின்னர் கடந்த 22.10.2025 அன்று சாத்தூரிலிருந்து காரில் தானும் தனது அம்மா தேவியும் தனது கணவர் பெருமாளும் திருவில்லிபுத்தூர் நோக்கி வந்து கொண்டிருந்தபோது பண்டிதன்பட்டி விலக்கு அருகே தாங்கள் வந்து கொண்டிருந்தபோது ஜெகதாம்பிகை தனியார் பேருந்து அதிவேகமாக வந்து தங்கள் காரின் மீது மோதியதில் தான் காரிலிருந்து வெளியே வந்து விழுந்துவிட்டதாகவும், தனது கணவருக்கு கழுத்தில் காயமும் கையில் ரத்தக்காயமும் ஏற்பட்டது என்றும், தனது அம்மாவிற்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு வலிப்பு வந்துவிட்டது என்றும், சம்பவயிடத்தின் அருகேயிருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் தங்களை திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள் என்றும், தனக்கு சிறு சிறு காயங்கள் என்பதால் தனக்கு முதல் சிகிச்சை அளித்தார்கள் என்றும், தனது கணவருக்கு கழுத்தில் தையல்போட்டார்கள் என்றும், தனது அம்மாவிற்கு பலத்த காயம் என்பதால் அவரை மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும், தனது அம்மாவை தாங்களும் விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்ததாகவும், இவ்வழக்கு சம்மந்தமாக அசா.1 மல்லி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4.4.அ.சா.4 திருமதி.தேவி தனது சாட்சியத்தில், தான் தற்போது சாத்தூரில் குடியிருந்து வருவதாகவும், தான் கூலி வேலை செய்து வருவதாகவும், அசா.1 தனது மருமகனின் தாய்மாமா என்றும், அசா.2 தனது மருமகன் என்றும், அசா.3 தனது மகள் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், அவர் ஓட்டுநராவார் என்றும், கடந்த வருடம் தீபாவளி முடிந்து 2 நாட்கள் கழித்து தனது மகளை திருவில்லிபுத்தூரில் விடுவதற்காக காரில் தானும் அசா.2 மற்றும் அசா.3 ஆகியோரும் வந்து கொண்டிருந்த போது பண்டிதன்பட்டி விலக்கு அருகே கார் மீது

பேருந்து மோதியது போல் இருந்தது அதில் தனக்கு ஏற்பட்ட காயத்தில் தான் உடனே மயங்கிவிட்டதாகவும், தனக்கு நெற்றி மற்றும் தலை முழுவதும் காயம் ஏற்பட்டது என்றும், தான் 2 வாரங்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததாகவும், அதன் பின்னர் தான் பார்த்தபோது தனது மருமகனுக்கு கழுத்தில் காயம் இருந்தது என்றும், தனது மகளுக்கு சிறு சிறு காயம் இருந்தது என்றும், தான் சம்பவத்திற்கு பின் நிதானமாக இல்லை என்றும், 15 நாட்கள் சிகிச்சைக்கு பின்னர் தான் வீட்டிற்கு வந்ததாகவும், தனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் 1 மாதம் கழித்து தான் சரியானது என்றும், தான் விருதுநகர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது போலீசார் தன்னை வந்து பார்த்தார்கள் என்றும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4.5.அ.சா.5 திரு.ரகுபதி தனது சாட்சியத்தில், தான் தற்போது மல்லி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 22.10.2025 அன்று 17.00 மணியளவில் தான் நிலைய பொறுப்பில் இருந்த போது நாகராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.135/2025 பிரிவுகள் 281, 125(a), BNS ஆக வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 என்றும், பின்னர் அன்றைய தினமே 17.45 மணியளவில் சம்பவயிடம் சென்று சாட்சிகள் காளியப்பன், மற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.3 என்றும், வரைபடம் அ.சா.ஆ.4 என்றும், பின்னர் அன்றைய தினமே சாட்சிகள் நாகராஜ், பெருமாள், ேஹமா ஆகியோர்களை தனித்தனியோ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பின்னர் 23.10.2025 அன்று நிலையம் ஆஜரான எதிரியை கைது காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் பிணையில் விடுவித்ததாகவும், பின்னர் 14.12.2025ம் தேதி அன்று சாட்சி தேவி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் அன்றயை தினமே விபத்து சம்பந்தப்பட்ட வாகனத்தை வாகன ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் கண்ணன் அவர்களை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், TN 67 BA 9252 என்ற

பதிவு எண் கொண்ட Ashok Leyland வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.5 என்றும், TN 59 BB 6266 Hundal Econ D Saloon என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 என்றும், பின்னர் காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்த திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் பிரபா வடிவரசி என்பவரையும் தேவி என்பவருக்கு விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை அளித்த சந்திரபிரகாஷ் என்பவரையும் விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், தேவி என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.7 என்றும், தேவி என்பவரது விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயச்சான்று அ.சா.ஆ.8 என்றும், பெருமாள் என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.9 என்றும், மருத்துவர் வழங்கிய காயச்சான்றின்படி இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 281 125(a)BNS லிருந்து பிரிவுகள் 281, 125(a), 125(b) BNS ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பியதாகவும், சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.10 என்றும், பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து 14.12.2025 அன்று எதிரி மீது பிரிவுகள் 281, 125(a), 125(b) BNS ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

5. இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டு, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் பிரிவு 351 (1)(ஆ) BNSS ன் கீழ் விளக்கி வினவியபோது, எதிரி தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டார். எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்வதால் விடுதலை செய்யப்படமாட்டாது என்று விளக்கிக் கூறப்பட்ட பிறகும் எதிரி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

6. மேலும் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி

நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி சட்டப்பிரிவுகள் 281, 125(a)(2 Counts), 125(b) BNS ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து, எதிரிக்கு வழங்க இருக்கும் தண்டனை பற்றி வினவியபோது, எதிரி கீழ்கண்டவாறு கூறினார்.

"ஆம் நான்தான் செய்தேன் என்றும், தெரியாமல் விபத்து நடந்துவிட்டது என்றும், குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்."

7. எதிரியின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டன. எதிரி வழக்கை ஒத்துக்கொண்டு முடிப்பதாக தெரிவித்த காரணத்தினாலும், அவருக்கு நன்னடத்தை சட்டத்தின் கீழ் எவ்வித பலன்களும் கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்யப்படுகிறது.

8. முடிவாக, எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 125(a)(2 Counts), 125(b) BNS ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து, எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281 BNS கீழான குற்றத்திற்கு ரூ.1000/– அபராதமும், 125(a))(2 Counts) BNS–ன் கீழான குற்றத்திற்கு தலா ரூ.2,500/–வீதம் ரூ.5,000/– அபராதமும், 125(b) BNS ன் கீழான குற்றத்திற்கு ரூ.6,000/– அபராதமும் விதித்து பிரிவு 271(2) BNSS ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் மொத்த அபராதத் தொகை ரூ.12,000/–(ரூபாய் பன்னிரெண்டாயிரம் மட்டும்) ஆகும். மேற்படி அபராத தொகையை கட்டத் தவறினால் 1 மாதம் மெய்க்காவல் சிறை தண்டணை விதித்து உத்தரவிடப்படுகிறது.

9. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் தாக்கல் இல்லை. எதிரி எழுதிக் கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17-ஆம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.நாகராஜ் |
| அ.சா.2 | திரு.பெருமாள் |
| அ.சா.3 | திருமதி.ஹேமா |
| அ.சா.4 | திருமதி.தேவி |
| அ.சா.5 | திரு.ரகுபதி |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | – | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | – | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | – | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | – | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | – | TN 67 BA 9252 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | – | TN 59 BB 6266 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை |
| அ.சா.ஆ.7 | – | தேவி என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |
| அ.சா.ஆ.8 | – | தேவி என்பவருக்கு விருதுநகர்அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயச்சான்று |
| அ.சா.ஆ.9 | – | பெருமாள் என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |
| அ.சா.ஆ.10 | – | சட்டபிரிவு மாறுதல் அறிக்கை |

<u>அரசு தரப்பு சான்றுப் பொருள்</u> – இல்லை

<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> – இல்லை

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

| | |
|---|---|
| 1. | எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தப்படவில்லை. |
| 2. | வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 3. | நடுவர் தீர்ப்புரையின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட்டுள்ளார். |
| 4. | இவ்வழக்கில் வழக்குச் சொத்து தாக்கல் செய்யப்படவில்லை |
| 5. | வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார். |